**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

**Calendar** :
**Miscellaneous** :
**Preliminary Register** : **Case No. CC/ 37/2023**
**Sessions** :
**Deposition of witness for** : **Prosecution LW1/PW1**
**Name** .. விக்னேஷ்

**Father's/Husband's Name** .. கிருஷ்ணமூர்த்தி
**Village**
**Taluk** ..
**Caste** ..
**Calling** ..
**Religion** ..
**Age** .. **31**

**Date: 18.02.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அன்னை சிவகாமி நகர், எண்ணூர் பகுதியில் வசித்து வருகிறேன். Thomas Ayya Infrastructure Private Ltd.-ல், Site Engineer ஆக பணிபுரிந்து வருகிறேன். 30.07.2022 அன்று காலை 11.00 மணியளவில் உதயம் பருப்பு டோல்கேட் பகுதியில், எங்கள் கம்பெனி மூலம் மழை நீர் வடிகால் பணி

நடந்து கொண்டிருந்தது. எங்கள் கம்பெனிக்கு சொந்தமான 40 கிலோ இரும்பு கம்பிகளை அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் எடுத்து சென்று கொண்டிருந்தனர். நானும் என்னுடன் பணிபுரியும் 4 நபர்கள் சென்று அவர்களை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இரும்பு கம்பிகளை திருடி சென்ற நபர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் இது குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

சம்பவம் நடந்த இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் அருகே சிக்னல் மற்றும் CCTV Camera-க்கள் இருந்தது என்றால் சரிதான். 40 கிலோ இரும்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்து, மீண்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு விசயமும் நடைபெறவில்லை அதனால் தான் காவலர் கொள்ளை முயற்சிக்காக வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி ஆட்டோ டிரைவர் செல்வம் தெரியுமா என்றால் தெரியும். செல்வம் என்பவர் ஆட்டோ ஓட்டுநர் அந்த நேரத்தில் அந்த பகுதிக்கு சென்றிருந்தார் என்பதால் அவர் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2026.02.18 13:21:01 +0530

**நீதித்துறை நடுவர்,**
**திருவொற்றியூர்**